]பேரவைத் தலைவர்]

(ஈ) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு—உறுப்பினர்கள் நியமனம்

பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதி 268 உட்பிரிவு 1-இன் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1989–90 ஆம் ஆண்டிற்கானபேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவிற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:

1. திரு. வி.கே. இராசு
2. டாக்டர் சி.ரா. மாசிலாமணி
3. திரு. கே.வி. இராமசாமி
4. திரு. ப. சுந்தரம்
5. திரு. டி.கே. பழனிச்சாமி
6. திரு. மீ.அ. வைத்தியலிங்கம்
7. திரு. எஸ்.ஆர். இராதா
8. திரு. ஆர். மூக்கன்
9. திரு. எ. ஏகாம்பர ரெட்டி
10. திரு. ஆர். நடேசன்
11. திரு. யூ.கே. வெள்ளிங்கிரி

பேரவையின் விதி 268, உட்பிரிவு 2-இன் கீழ் திரு. எஸ்.ஆர். இராதா அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கின்றேன்.

5 கவன ஈர்ப்புகள்.

(அ) வேதாரணியம் தொகுதியில் பாக் ஜலசந்தியிலிருந்து விசாக வெள்ளம் புகுந்து ஆற்று நீரை உப்பு நீராக்கியதால் விளைநிலங்கள் பாதிப்பு.

திரு. பி. வி. இராஜேந்திரன் : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வேதாரணியம் தொகுதியில் பாக். ஜலசந்தியிலிருந்து விசாக வெள்ளம் புகுந்து ஆற்று நீரை உப்பு நீராக்கியும் விளை நிலங்களைப் பாழாக்கியும் வருவதைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்காதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.